தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 94 | 4 Pages | 5.11.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 94 | 4 பக்கங்கள் | 5.11.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று**

**விளக்கம்:**

**பலச் சுடர்களை உடைய பெரு நெருப்பில் தோய்வது போன்றதுன்பத்தைஒருவன்செய்தபோதிலும்கூடுமானால் அவன் மேல் சினங் கொள்ளாதிருத்தல் நல்லது.**

## ஹிஸ்புல்லா ராக்கெட் கமாண்டர் கொலை.. கடற்படை தளபதி கைது லெபனானுக்குள் புகுந்த இஸ்ரேல் கமாண்டோக்கள்

பாலஸ்தீனம், நவ.5

பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் பெண்கள் குழந்தைகள் உட்பட 43 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஒரு வருடமாக தாக்குதல் நடத்தியும் ஹமாஸ் அமைப்பை அழிக்க முடியமால் இஸ்ரேல் திணறி வருகிறது.

இதற்கிடையே லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸுக்கு ஆதராவாக செயல்படும் ஹிஸ்புல்லாவை குறிவைக்கும் இஸ்ரேல் அதன் தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை கொன்றது.



தொடர்ந்து அடுத்த தலைவராக அறியப்பட்ட ஹாசன் ஷபிதைனி கொல்லப்பட்டார்.


எனவே தற்போது நைம் காசிம் ஹிஸ்புல்லா தலைவராகத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பை நிறுத்திக்கொண்டால் அமைதிப் பேச்சுவார்த்தைக்கும் தயார் என்று அவர் தெரிவித்தார். ஆனால் அமைதி பேச்சுவார்த்தையை விரும்பாத இஸ்ரேல் ஈரான் உடனும் வம்பிழுத்து வருகிறது.

அந்நாட்டின் அணு ஆயுத தளங்களை தாக்கப்போவதாக இஸ்ரேல் மிரட்டி வருகிறது. இந்நிலையில் லெபனானின் இஸ்ரேல் நடத்திய சமீபத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா முக்கிய தளபதி உயிரிழந்துள்ளார்.

தெற்கு லெபனானில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் நாசர் பிரிகேட் ராக்கெட் பிரிவின் உயர் தளபதி ஜாபர் காதர் பவுர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் மீதான பல தாக்குதலுக்கு அவர் மூளையாக செயல்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இஸ்ரேலில் இருந்து 140 கிலோமீட்டர் தொலைவில் உள்ள லெபனானின் கடற்கரை நகரமான பெட்ரோன் பகுதிக்குள் இஸ்ரேல் கடற்படையின் சிறப்பு கமாண்டோக்கள் தடாலடியாக நுழைந்தனர். அவர்கள் கடற்கரை அருகே உள்ள வீட்டில் பதுங்கி இருந்த ஹிஸ்புல்லா கடற்படை தளபதி இமாத் ஹமீசை கைது செய்தனர். இவர் ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த உறுப்பினராகவும் செயல்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

## சவூதி அரேபியாவில் 4 ஆயிரம் ஆண்டு பழமையான நகரம் கண்டுபிடிப்பு



சவுதி, நவ.5

சவூதி அரேபியாவில் 4 ஆயிரம் ஆண்டுகள் பழமையான நகரத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

வடமேற்கு சவூதி அரேபியாவில் பழமையான கோட்டை நகரத்தின் எச்சங்கள், பிரெஞ்சு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் குய்லூம் சார்லக்ஸ் மற்றும் அவரது குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் 14.5 கிலோமீட்டருக்கு சுவர் இருந்தது.

அல்நதாஹ் என்று அழைக்கப்படும் இடம், வறண்ட பாலைவனத்தால் சூழப்பட்ட பசுமையான பகுதியில் நீண்ட காலமாக மறைந்து இருந்ததாக தெரிவித்தனர்.

இதுகுறித்து பேசிய ஆராய்ச்சியாளர்கள், "இந்த நகரம் ஆரம்பகால வெண்கல யுகத்தின் கிமு 2400க்கு முந்தையது. இந்நகரத்தில் 500 பேர் வரை வாழ்ந்திருக்கலாம். இந்த முக்கியமான கண்டுபிடிப்பு பண்டைய மக்கள் நாடோடிகளிலிருந்து நகர்ப்புற வாழ்க்கை முறைக்கு எவ்வாறு மாறியது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இது பிராந்தியத்தின் வரலாற்று நிலப்பரப்பில் அதன் முக்கியத்துவத்தை வெளிகாட்டுகிறது. அக்கால சமூக மற்றும் கட்டிடக்கலை வளர்ச்சிகள் பற்றிய நமது புரிதலை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், அரேபிய தீபகற்பத்தின் இந்த பகுதியில் நகரமயமாக்கலை நோக்கிய முக்கிய மாற்றத்தை வலியுறுத்துகிறது. குடியிருப்புகள் ஒரு நிலையான திட்டத்தைப் பின்பற்றி கட்டப்பட்டன மற்றும் சிறிய தெருக்களால் இணைக்கப்பட்டன.

வெண்கல யுகத்தில் வடமேற்கு அரேபியாவில் பெரும்பாலும் ஆயர் நாடோடி குழுக்கள் ஆதிக்கம் செலுத்தினர். நீண்ட தூர வர்த்தகத்துக்காக ஒருங்கிணைக்கப்பட்ட சிறிய கோட்டைகளை மையமாகக் கொண்டு ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட நினைவுச் சின்ன சுவர் அங்கு உள்ளன" என்று தெரிவித்தனர்.

# புதிது புதிதாக கட்சி தொடங்குபவர்கள் எல்லாம் விஜய்யை மறைமுகமாக விமர்சித்த முதல்வர்

சென்னை, நவ.5

சென்னை கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (சி.எம்.டி.ஏ.) சார்பில் முதல்அமைச்சரின் சட்டசபை உறுப்பினர் மேம்பாட்டு நிதியை கொண்டு "முதல்வர்படைப்பகம்" என்ற பெயரில் கோவொர்க்கிங் ஸ்பேஸ் அமைக்கப்பட்டுள்ளது. இதுரூ.2.85கோடிமதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை கொளத்தூர் தொகுதியில் 'முதல்வர் படைப்பகத்தை' முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

இதனைத்தொடர்ந்து 'அனிதா அச்சீவர்ஸ் அகாடமி'மூலம் பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவில் பேசிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், "நீட் தேர்வுக்கு எதிரான சட்டப்போராட்டம் தொடரும். கடந்த 2017ம் ஆண்டு மாணவி அனிதா உயிரை மாய்த்துக் கொண்ட போது நாமெல்லாம் பெரிய வேதனைக்கு ஆளானோம். நீட் தேர்வு அனிதாவின் கனவை சிதைத்து விட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் மருத்துவக் கனவை சிதைக்கும் நீட் தேர்வுக்கு எதிரான, சட்டப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது

நீட் தேர்வுக்கு எதிரான தமிழ் நாட்டு மக்களின் ஒருமித்த குரலுக்கு ஒரு நாள் ஒன்றிய அரசு பணியத்தான் போகிறது. இன்று இல்லாவிட்டாலும், நாளைக்கு , நாளைக்கு இல்லாவிட்டாலும் நாளை மறு நாள் நீட் தேர்வு கோரிக்கை நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.



தேவையில்லாமல் எல்லோருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை.. அது தேவையும் இல்லை. எங்கள் நேரத்தை வீணடிக்க நாங்கள் விரும்பவில்லை. 'வாழ்க வசவாளர்கள்' என அண்ணா கூறியதை நினைவில் வைத்து செயல்படுகிறோம்.

புதிது புதிதாக கட்சி தொடங்குபவர்கள் எல்லாம் தி.மு.க. அழிய வேண்டுமென கூறுகிறார்கள். தி.மு.க ஆட்சியின் 4 ஆண்டு சாதனைகளை அவர்கள் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏராளமான திட்டங்களை கொண்டுவந்தா மட்டும் பத்தாது.. அதை நிறைவேற்றனும். நாம் அதை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் என நெஞ்சை நிமிர்த்தி சொல்வேன்" என்று அவர் கூறினார்.

# அ.தி.மு.க. கிளை செயலாளர் வெட்டிக்கொலை: தொடர் கொலைகளால் மக்கள் அச்சம்



சிவகங்கை,நவ.5

சிவகங்கை அருகே நாட்டாகுடியைச் சேர்ந்தவர் கணேசன் (70). அ.தி.மு.க. கிளைச்செயலாளரான இவர், அப்பகுதியில் பெட்டிக்கடை நடத்தி வந்தார். இந்நிலையில் இன்று அதிகாலை கடையை திறக்கச் சென்ற அவரை, மர்மநபர் ஒருவர் வெட்டிவிட்டு தப்பினார். இதில் கணேசன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும் கொலை செய்த அதே நபர்,முன்னதாகஅதேகிராமத்தைச் சேர்ந்த பாலு என்பவரையும் வெட்டினார். ஆனால் அவர் தப்பியோடியதால் உயிர் தப்பினார். இதுகுறித்து சம்பவ இடத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தீபாவளி பண்டிகை முடிந்தநிலையில் அங்கு தொடர்ந்து 3 கொலைகள் நடந்துள்ள சம்பவம் அந்த பகுதியில் உள்ள மக்களை அச்சத்தில் ஆழ்த்தி உள்ளது.

# சென்னை மெரினாவில் போலீசாரை ஆபாசமாக திட்டிய ஜோடிக்கு ஜாமீன் மறுப்பு கோர்ட்டு உத்தரவு

சென்னை, நவ.5

சென்னை மெரினா லூப் சாலையில் நின்று கொண்டிருந்த காரை எடுக்குமாறு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோலீசார்கூறியபோது, அந்த காரில் இருந்த ஜோடி, போலீசாரை ஆபாசமாகதிட்டியவீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இது தொடர்பான புகாரின் அடிப்படையில் சந்திரமோகன் மற்றும் அவரது தோழி தனலெட்சுமி ஆகியோர் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதையடுத்து, ஜாமீன் கோரி சந்திரமோகன் மற்றும் அவரது தோழி தனலெட்சுமி ஆகியோர்சென்னை முதன்மை அமர்வு கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்த



னர். இந்த மனு கடந்த மாதம் 25ம் தேதி விசாரணைக்கு வந்த போது ஜாமீன் மனு தொடர்பாக காவல் துறை பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு, வழக்கின் விசாரணையை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த மனு இன்று கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது இருவருக்கும் ஜாமீன் வழங்கக்கூடாது என காவல்துறை கடும் எதிர்ப்பு தெரிவித்தது. காவல்துறையின் எதிர்ப்பை தொடர்ந்து, ஜாமீன் வழங்க சென்னை முதன்மை அமர்வு கோர்ட்டு மறுப்பு தெரிவித்து, ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

சந்திரமோகன் மற்றும் அவரது தோழி தனலட்சுமி மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிதம்பரம் நடராஜர் கோவிலில் புதிய கொடிமரம் நட தடை

சிதம்பரம், நவ.5

கடலூர்மாவட்டம்சிதம்பரத்தில் உலக புகழ்பெற்ற நடராஜர் கோவில் உள்ளது. இக்கோவில் வளாகத்தில் தில்லை கோவிந்தராஜ பெருமாள் சன்னதி அமைந்துள்ளது. இங்கு நடராஜருக்கு மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனம், ஆனி மாதம் ஆனி திருமஞ்சனம் தரிசனதிருவிழாக்கள்நடைபெற்று வருகிறது.

தில்லை கோவிந்தராஜ பெருமாளுக்கு பிரமோற்சவம் நடத்த வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த சூழலில் தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோவிலில் உள்ள கொடிமரம் பல ஆண்டுகளாக வெயில், மழையால்சேதமடைந்து இருப்பதால், அதற்கு பதிலாக புதிய கொடிமரம் வைக்க வேண்டும் என்று கோவில் நிர்வாக அறங்காவலர் சுதர்சன் மற்றும் பட்டாச்சாரியார்கள் முடிவு செய்தனர். இதற்காக நேற்று கொடி மரத்திற்கு படையல் செய்து வழிபட்டனர்.

இதுபற்றி அறிந்ததும் நடராஜர் கோவில் தீட்சிதர்கள் ஒன்று திரண்டு, தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோவில் நிர்வாகிகளிடம் இக்கோவிலில் பிரமோற்சவம் நடத்துவது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது. இதனால் இங்குள்ள கொடி மரத்தை புதுப்பிக்கவோ, மாற்றவோ கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

இந்நிலையில், சிதம்பரம் நடராஜர் கோவில் வளாகத்தில் உள்ள தில்லை கோவிந்தராஜ பெருமாள் சன்னிதானத்தில் புதிய கொடிமரம் நடுவதற்கு தடை விதித்து சிதம்பரம் சார்பு நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன் உத்தரவிட்டுள்ளார். மேலும் 15 நாட்களுக்கு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் தடை விதித்து உத்தரவிட்டுள்ளார். நீதிபதியின் உத்தரவை ஏற்று கொடிமரம் நடும் நிகழ்வை அறநிலையத்துறை அதிகாரிகள் கைவிட்டனர். இதனால் காவல்துறையினர் உள்பட அனைவரும் கோவிலில் இருந்து வெளியேறினர்.

# சென்னை திருவொற்றியூரில் விபத்து ஒரே நாளில் 4 பேர் உயிரிழப்பு



சென்னை, நவ.5

சென்னை திருவொற்றியூரில் ஒரே நாளில் அடுத்தடுத்து வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

எண்ணூர் விரைவு சாலை உள்பட அடுத்தடுத்து வெவ்வேறு இடங்களில் 4 பேர் விபத்தில் பலியாகியுள்ளனர்.

மணலி எம்எஃப்எல் அருகே நிகழ்ந்த இருசக்கர வாகன விபத்தில் முகமது அலி என்பவர் உயிரிழந்துள்ளார்.

இதேபோல், இருசக்கர வாகனம் மீது டேங்கர் லாரி மோதிய விபத்தில் வினோத் என்ற இளைஞர் பலியாகியுள்ளார்.

# கல்லூரி மாணவர்களுக்கு போதை மாத்திரை சப்ளை செய்த வாலிபர் கைது




மண்ணச்சநல்லூர், நவ.5

திருச்சி சமயபுரம் சுங்கச்சாவடி அருகே உள்ள தனியார் கல்லூரி மாணவர்களுக்கு போதை மாத்திரை விற்பனை செய்வதாக சமயபுரம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் சமயபுரம் இன்ஸ்பெக்டர் தசரதன் மற்றும் சப்இன்ஸ்பெக்டர் கவிதா ஆகியோர் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமாக திரிந்த வாலிபரை பிடித்து விசாரணை மேற்கொண்டனர். இதில் அவர் லால்குடி அருகே தாளக்குடி முத்தமிழ் நகர் பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மகன் முருகானந்தம் (வயது 24) என்பதும் அப்பகுதியில் உள்ள கல்லூரி மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் விற்பனை செய்து வந்தது தெரிய வந்தது.

இதை தொடர்ந்து அவரை போலீசார் கைது செய்து திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர். மேலும் இதற்கு பின்னணியில் இருப்பவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பிறந்து 50 நாட்களே ஆன பெண் குழந்தை ரூ.4 லட்சத்துக்கு விற்பனை: 5 பேரை பிடித்து போலீசார் விசாரணை

ஈரோடு, நவ.5

தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்தவர் நித்யா (வயது 28). இவர் கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தனியாக வசித்து வந்தார். பின்னர் கடந்த சில வருடங்களுக்கு முன்பு ஈரோட்டுக்கு வந்தார். ஈரோடு பஸ் நிலைய பகுதியில் தங்கி இருந்தார்.

அப்போது சந்தோஷ்குமார் என்பவருடன் நித்யாவுக்கு பழக்கம் ஏற்பட்டது. இருவரும் நெருங்கி பழகி வந்த நிலையில் நித்யா கர்ப்பம் அடைந்தார். அப்போது சந்தோஷ்குமார், நித்யாவிடம் நமக்கு குழந்தை பிறந்தால் அதனை விற்று விடலாம் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் நித்யாவுக்கு பெண் குழந்தை பிறந்தது. இதனை அடுத்து குழந்தையை விற்கும் முயற்சியில் ஈடுபட்ட சந்தோஷ் குமார் பெண் இடைதரகர்களான ஈரோட்டைச் சேர்ந்த செல்வி, ராதாமணி, பானு மற்றும் ரேவதி ஆகியோர் உதவியை நாடியுள்ளார்.

அவர்களும் நித்யாவின் பெண் குழந்தையை நாகர்கோவிலை சேர்ந்த ஒரு தம்பதியினருக்கு விற்க பேரம் பேசி உள்ளனர். இறுதியாக ரூ.4 லட்சத்துக்கு அந்தப் பெண் குழந்தையை நாகர்கோவிலைச் சேர்ந்த தம்பதியிடம் விற்றுள்ளனர். பிறந்து 50 நாட்களே ஆன குழந்தையை விற்ற பின்னர் நித்யா குழந்தை நினைவாக இருந்துள்ளார்.

குழந்தையை விற்பனை செய்த பிறகு மனமில்லாமல் இருந்த நித்யா நடந்த சம்பவம் குறித்து மாவட்ட குழந்தைகள் நலக்குழுவிற்கு தகவல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அதிகாரிகள் அளித்த புகாரின் பேரில் ஈரோடு வீரப்பன்சத்திரம் போலீசார் நித்யாவிடம் தீவிர விசாரணை நடத்தினர்.

அப்போது போலீசாரிடம் அவர் நடந்தவற்றை கூறினார். இதை அடுத்து சந்தோஷ் குமார், பெண் இடைத்தரகர்களான செல்வி, ராதாமணி, பானு, ரேவதி ஆகிய 5 பேரை போலீசார் பிடித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் குழந்தையை ரூ.4 லட்சம் கொடுத்து வாங்கிய நாகர்கோவில் தம்பதியினரிடமும் போலீசார் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளனர். முழுமையான விசாரணை முடிந்த பிறகு தான் குழந்தை விற்பனை செய்த விவகாரத்தில் மேலும் யாருக்கு தொடர்பு உள்ளது எனவும், வழக்கு குறித்த முழு விவகாரம் தெரியவரும் என போலீசார் தெரிவித்துள்ளனர். பெண் குழந்தை விற்ற இச்சம்பவம் ஈரோட்டில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மழைக்கால நோயில் இருந்து மக்களை காக்க வேண்டும்: ஜி.கே.வாசன்



சென்னை, நவ.5

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

கடலோரப் பகுதியை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மைய அறிவிப்பு தெரிவிக்கிறது. இதனால் பல்வேறு மாவட்டப் பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு மழையோ கனமழையோ பெய்ய வாய்ப்புண்டு.

கடந்த காலத்தில் மழை, கனமழை, அதி கனமழை, புயல், வெள்ளம் ஆகியவற்றால் மக்கள் அனுபவித்த சிரமங்கள், துன்பங்கள் ஏராளம்.

குறிப்பாக விவசாய நிலங்கள் மழையால், புயல், வெள்ள நீரால் சேதமடைந்து, பயிர்கள் பாழாகி, விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தார்கள். மேலும் மக்களும் மழைக்கால நோயினால் பாதிக்கப்பட்டார்கள்.

இப்படி மழைக்காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை கவனத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையாக செயல்பட்டால் பெரும் பாதிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். பொது மக்களும் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து செயல்பட வேண்டும். தமிழக அரசு, மழைக்காலத்தில் சென்னை உள்ளிட்ட தென் மாவட்டப் பகுதிகள் என மாநிலத்தில் எங்கு மழை பெய்தாலும் மக்களை, விவசாயத்தை, கால்நடைகளை பாதுகாக்க தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, மக்களுக்கு துணை நிற்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மக்களுக்காக பணியாற்றிய அ.தி.மு.க.வை விஜய் எப்படி விமர்சிக்க முடியும் எடப்பாடி பழனிசாமி



சென்னை, நவ.5

எடப்பாடி பழனிசாமி வீரப்பம்பாளையத்தில் அ.தி.மு.க. செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கே. விஜய் அ.தி.மு.க.வைவிமர்சிக்காதது குறித்து?

ப. எம்.ஜி.ஆர் ஆட்சி காலத்திலும் சரி, ஜெயலலிதா ஆட்சி காலத்திலும் சரி, அம்மாவுக்கு பிறகும் சரி நிறை திட்டங்களை தந்துநிறைவேற்றப்பட்டு மக்கள் செல்வாக்கு பெற்ற கட்சி அ.தி.மு.க., அதனால்அ.தி.மு.க.வை விஜயால் எப்படி விமர்சிக்க முடியும்.

கே. தி.மு.க.வில் கூட்டணி பிளவு ஏற்பட்டுள்ளது என எதை வைத்து சொல்கிறீர்கள்?

ப. காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கூட்டணியில் பங்கு என அறிவிப்பு வெளிட்டு இருக்கிறார்கள். அதுபோல் விடுதலை சிறுத்தை கட்சி வெளியிட்டு இருக்கிறது. கம்யூனிஸ்ட்டு கட்சி போராட்டம் நடத்தி வருகிறார்கள். அரசாங்கத்தை எதிர்த்து போராடுகின்ற போது கூட்டணியில் பிளவு என்று பார்க்க வேண்டியது தானே.

3 வருட காலமாக தி.மு.க கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் இதுவரைக்கும் இப்படி பேசியது இல்லை. மக்கள் பிரச்சனைக்காக எந்த போராட்டமும் செய்யவில்லையே. அண்மை காலமாக தானே இதை எல்லாம் அறிவிக்கிறாங்க. இதனால் தான் அவர்களுடைய நடவடிக்கையை வைத்து தான் கூட்டணியில் பிளவு இருப்பதாக தெரிவிக்கிறோம்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு பட்டியலின மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆங்காங்கே வன்முறை. நம்முடைய வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெருமாம்பட்டி பகுதியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர் பிரச்சனை செய்தவர்களிடம் அமைதியாக போங்க என தட்டி கேட்கிறார். அதற்காக அவரது வீட்டின் கூரை மீது ஏறி உடைச்சு உள்ளே இருந்த அவரை பிடித்து இழுத்து வெளியே போட்டு அடித்து உதைக்கிறாங்க. எனவே பட்டியலின மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை இந்த ஆட்சியில் உருவாகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக அரசின் வரி உயர்வுக்கு கடும் கண்டனம்: மதுக்கடைகளை மூட வேண்டும்: த.வெ.க. செயற்குழு தீர்மானங்கள்



சென்னை, நவ.4

தமிழக வெற்றிக் கழகத்தின் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

★ முதலில் திருவள்ளுவருக்கு வர்ணம் பூசினர். அடுத்து தமிழகம் வேறு, தமிழ்நாடு வேறு என்றனர். அதன்பிறகு, தமிழ்த்தாய் வாழ்த்து குறித்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளனர். பிளவுவாத அரசியல் கலாச்சாரத்தைத் தூக்கிப் பிடிப்போர், எங்கள் தாய்மொழித் தமிழ் மட்டுமல்லாமல், தமிழ் மொழி சார்ந்த எந்த ஒன்றிலும் தலையிட ஒன்றிய அரசுக்கு மட்டுமல்ல எங்கள் தாய்மொழி காக்கும் எல்லா முயற்சிகளிலும் தமிழக வெற்றிக் கழகம் சமரசமின்றிச் செயல்படும். தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கைக்கு எதிராக, மூன்றாவது மொழியைத் திணிக்க முயலும் ஒன்றிய அரசின் கனவு, எமது மொழிப் போர் தியாகிகள் வாழ்ந்த மண்ணில் எக்காலத்திலும் நிறைவேறாது என்பதைத் தமிழக வெற்றிக் கழகம் உரக்கச் சொல்லிக்கொள்கிறது.

★ அரசின் வருவாயைப் பெருக்க எந்த ஓர் அறிவார்ந்த திட்டத்தையும் செயல்படுத்தாமல், மின் கட்டண உயர்வு, பால் கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு போன்று பொது மக்கள் மீது மேலும் மேலும் வரிச்சுமையை மட்டுமே அதிகமாக விதித்து, மக்களின் பொருளாதார நிலையைக் கேள்விக்குறி ஆக்கியுள்ள திமுக அரசுக்கு இச்செயற்குழு கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கிறது.

★அமைதிப்பூங்காவான தமிழ்நாட்டில், பட்டப்பகலில் அரங்கேறும் குற்றச் செயல்கள் சட்டம் ஒழுங்கின் சீர்கேட்டையே காட்டுகிறது. மேலும், தொடரும் கள்ளச்சாராய விற்பனை, இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ள போதைப் பொருட்களின் பழக்கம் போன்ற நிர்வாகச் சீர்கேடுகளைச் சரிசெய்யாமல், மக்கள் நலனைக் காட்டிலும், ஆட்சி அதிகாரத்தில் உள்ள குறிப்பிட்ட சிலரின் நலனிலேயே அக்கறையுடன் செயல்பட்டு வரும் ஆளும் திமுக அரசுக்கு இச்செயற்குழு கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

★ ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பொய்களின் பட்டியலாக ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, அதன் வாயிலாக ஜனநாயகத்தையும் மக்களையும் ஏமாற்றியதுதான் தற்போதைய ஆளும் கட்சியான திமுக. தேர்தல் வாக்குறுதியை வழக்கம் போலக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, ஏழை, நடுத்தர மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத மின்கட்டண உயர்வைத் திணித்துள்ளதமிழகஅரசு, இரு மாதத்திற்கு ஒரு முறை மின் கணக்கீடு செய்யும் முறையைக் கைவிட்டு, மாதந்தோறும் மின்கணக்கீட்டுமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

★ மகளிர் உரிமைத் தொகை, பரிசுத் தொகுப்பு என்று ஒரு புறம் அறிவித்து விட்டு, மறுபுறம் மதுக்கடைகளைத் திறந்து, அதன் மூலம் அரசுக்கு வருவாயைப் பெருக்கி வருவது ஏற்புடையதல்ல. சமூகக் குற்றங்கள், சமூகப் பாதுகாப்பின்மை அதிகரிப்பதற்கு முக்கியக் காரணமாக விளங்கும் மதுக்கடைகளைக் கால நிர்ணயம் செய்து மூட வேண்டும். மதுக்கடை மூலம் பெறும் வருவாயை விடக் கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில் மாற்றுத் திட்டங்களைக் கண்டறிந்து செயல்படுத்த வேண்டும் என்று தி.மு.க. அரசை இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

★ தென்னிந்தியாவிற்கான உரிய பிரதிநிதித்துவம் வழங்குகின்ற வகையில், உச்ச நீதிமன்றக் கிளையைச் சென்னையில் அமைக்க வேண்டும். நீதிபதிகள் அடங்கிய உயர்நீதிமன்ற பெஞ்ச்சில் வழக்கு சம்பந்தப்பட்ட வாதி மற்றும் பிரதிவாதிகள் தங்கள் தரப்பு நியாயத்தைச் சொல்லும் போது அதைச் சரியாகப் புரிந்துகொள்ளும் பொருட்டு, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நீதிபதி ஒருவர் இருக்க வேண்டும். ஒன்றிய அரசு, இதைச் சட்டரீதியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

★ தமிழ் மண்ணின் மூவேந்தர்களான சேரர், சோழர், பாண்டியர் ஆட்சியின் வரலாற்றுப் பெருமைகளை உலகுக்குப் பறைசாற்றும் வகையில், பிரமாண்டமான அருங்காட்சியகம் சென்னையில் கட்டப்பட வேண்டும்.

★தமிழக அரசால் புதிதாகக் கட்டப்பட்டுத் திறக்கப்படும் பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் கலையரங்கங்களுக்கு, தமிழ் மண்ணிலிருந்து நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த சுதந்திரப் போராட்டத் தியாகிகள், மொழிப் போர்த் தியாகிகளின் பெயர்களைச் சூட்டி, அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

★ இஸ்லாமிய சகோதரிகளின் தமிழ்த் தொண்டை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் இஸ்லாமிய சகோதரி ஒருவருக்கு அரசு சார்பில் கண்ணியமிகு காயிதே மில்லத் பெயரில் விருதும் பணமுடிப்பும் வழங்கப்பட வேண்டும்.

★ தமிழ்நாட்டில் முதியோர் நலனை உறுதி செய்யும் கொள்கை வரைவை உருவாக்கி நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

★ கன்னியாகுமரிப் பகுதியில் அணுக் கனிமங்களை அகழ்ந்தெடுக்கும் சுரங்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒன்றிய அரசு முயல்கிறது. தென் தமிழகத்தைப் பாழ்படுத்தும் இன்னொரு முயற்சியே இது. எங்கள் மண்ணையும் மக்களையும் பாழ்படுத்தும் இது போன்ற அபாயம் விளைவிக்கும் நாசகார, நச்சுத் திட்டங்களை உடனடியாகக் கைவிடவேண்டும்.

★ கூட்டாட்சி அமைப்பிற்கு எதிரான தாக்குதலாக இருக்கின்ற வக்பு சட்டத்திருத்த மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

★ நீட் தேர்வால் தமிழ்நாட்டில் இருக்கும் மாணவ மாணவிகள், குறிப்பாக, கிராமப்புறங்களில் இருக்கும் ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியலினவகுப்பினைச் சேர்ந்த மாணவமாணவிகள் அனைவருமே மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். நீட் தேர்வு விலக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, கல்வியைப் பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும். ஒருவேளை அதில் சிக்கல் இருக்கிறது என்றால், ஓர் இடைக்காலத் தீர்வாக, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத்திருத்தி, ஒருசிறப்புப் பொதுப் பட்டியல் என்பதை உருவாக்கி அதில் கல்வியைச்.சேர்க்கவேண்டும். மாநில அரசுகளுக்கு முழுச் சுதந்திரம் தரப்பட வேண்டும். அப்போது தமிழ்நாட்டில் நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய முடியும். எனவே கல்வியைப் பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர, ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பெருமைப்படுத்திடும் வகையில் தமிழக அரசு ஆண்டுதோறும் 'தகைசால் தமிழர் விருது' வழங்குகிறது. இந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விருதாளருக்குப் பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி வருவதற்காகத் தமிழக அரசை இச்செயற்குழு வரவேற்கிறது.

★ இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டா ராக்கெட் ஏவுதளத்தைத் தொடர்ந்து, தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம் சுமார் 2,376 ஏக்கர் நிலப் பரப்பளவில் அமைக்க உள்ளது. இதன் மூலம் தமிழக மக்களின் நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றியதுடன், பெரும் வேலை வாய்ப்புகளை வழங்கும் ஒரு திட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தை இச்செயற்குழு வரவேற்கிறது.

இயக்கத்திற்காகவும் கழகத்திற்காகவும் நீண்ட காலமாகப் பணியாற்றி, உடல் நலக் குறைவால் திடீரெனக் காலமான கழகப் போராளி புதுச்சேரி மாநில நிர்வாகி சரவணன், மாநாட்டில் பங்கேற்க வரும் போது, எதிர்பாராமல் நிகழ்ந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திருச்சி தெற்கு மாவட்டக் கழக இளைஞரணித் தலைவர் வழக்கறிஞர் வி.எல்.சீனிவாசன், திருச்சி தெற்கு மாவட்டக்கழகத்துணைத் தலைவர் ஜே.கே.விஜய்கலை, கழகத் தோழர்கள் வசந்தகுமார், ரியாஸ், உதயகுமார் மற்றும் மருத்துவ சிகிச்சை பலனின்றி உயிரிழந்த கழகத் தோழர்சார்லஸ் ஆகியோர் மறைவுக்கு இச்செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

கழகத்திற்காக இவர்கள் ஆற்றிய களப் பணிகள் கழக வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும். மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# அக்கொண்டப்பள்ளியில் மின்சாரம் சரியாக இல்லாத காரணத்தால் கூடுதல் டிரான்ஸ்பார்மர் அமைத்தனர்



கிருஷ்ணகிரி நவ,5

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் அக்கொண்டப்பள்ளியில் கிராமத்தில் சில பகுதியில் சில நாட்களாக மின்சாரம் பவர் சரியான வோல்டேஜ் இல்லாத காரணத்தால் பொது மக்கள் அக்காண்டப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் முனிரெட்டியிடம் புகார் கூறினர். இதை கருத்தில் கொண்டு முனிரெட்டி அவர்கள் சம்பந்தப்பட்ட மின் அதிகாரிகளிடம் சென்று எங்கள் கிராமத்தில் சரியான மின்சாரம் பவர் இல்லாத காரணத்தால் மாணவர்கள் படிப்பு மற்றும் கிரைண்டர், மிக்ஸி ஓடவில்லை இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அக்கொண்டப்பள்ளி கிராமத்திற்கு கூடுதல் ஒரு டிரான்ஸ்பார்மர் அமைத்து தாருங்கள் என்று மின்வாரியம் அதிகாரிகளிடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் முனிரெட்டி அவர்கள் கூறினார் இதை கருத்தில் கொண்டு மின்வாரிய அதிகாரிகள் இன்று அக்கொண்டப்பள்ளியில் கூடுதல் டிரான்ஸ்பார்மர் அமைத்தனர். பொதுமக்கள் மின்சாரம் சரி செய்து தந்ததற்கு முனிரெட்டி அவர்களுக்கு பொதுமக்கள் நன்றி கூறினார்கள். இந்த நிகழ்ச்சியில் பைரமங்கலம் ஊராட்சித் துணைத் தலைவர் வெங்கடேஷ், முன்னாள் கவுன்சிலர் கோபால் ரெட்டி, பைரமங்கலம் ஊராட்சி கவுன்சிலர் சுப்பிரமணியரெட்டி, மற்றும் ஊர் பொதுமக்கள், என பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இதுவரை இல்லாத அளவில் பயணம் தீபாவளி சிறப்பு பஸ்கள் முன்பதிவில் புதிய சாதனை



சென்னை, நவ.5

தீபாவளி பண்டிகை முடிந்து பொதுமக்கள் சென்னை திரும்புவதற்காக 12,846 பஸ்கள் இன்று முதல் இயக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தீபாவளி பண்டிகையையொட்டி லட்சக்கணக்கான மக்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு சென்றிருந்தனர். இதையொட்டி தமிழக அரசு போக்குவரத்துதுறை 28ந்தேதியில் இருந்து 30ந்தேதி வரை சிறப்பு பஸ்களை இயக்கியது. சிறப்பு பஸ்கள் மூலம் 5.76 லட்சம் பேர் பயணம் செய்து இருந்தனர்.

இந்த நிலையில் தீபாவளி பண்டிகையை முடித்து விட்டு இன்று முதல் அவரவர் ஊர்களில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் புறப்பட்டு சென்னைக்கு திரும்புவார்கள்.

இதனை கருத்தில் கொண்டு 12,846 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. குறிப்பாக பல்வேறு நகரங்களில் இருந்து இந்த பஸ்கள் சென்னைக்கு வர உள்ளன.

இந்த சிறப்பு பஸ்களில் பயணம் செய்ய இன்று ஒரே நாளில் 75 ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகள் முன்பதிவு செய்துள்ளதாக போக்குவரத்து துறை செயலாளர் பணீந்திர ரெட்டி தனது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

பயணிகள் கடைசி நேர கூட்ட நெரிசலில் பயணிப்பதை தவிர்த்து தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு tnstc.in அல்லது TNSTC அதிகாரப்பூர்வ மொபைல் செயலியை பயன்படுத்தி முன்பதிவு செய்து பயணிக்க வேண்டும் என்றும் அதில் பதிவிட்டுள்ளார். இந்த முன்பதிவு இதுவரை இலலாத ஒரு புதிய சாதனையாக பார்க்கப்படுகிறது.

# மாதம் ஒருமுறை மின் கட்டணம் கணக்கெடுக்காமல் ஏமாற்றுவதா? அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை, நவ.5

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

2021ம் ஆண்டு தேர்தலின் போது நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இரு மாதங்களுக்கு பதிலாக மாதம் ஒருமுறை மின்சாரப் பயன்பாட்டை கணக்கெடுக்கும் முறையை அறிமுகம் செய்வோம் என தி.மு.க. வாக்குறுதி அளித்தது. ஆனால், அதன்பின் மூன்றரை ஆண்டுகள் ஆகியும் அந்த வாக்குறுதியை செயல்படுத்தவில்லை.

அதுகுறித்து கேட்கும் போதெல்லாம், மாதந்தோறும் மின்சாரப் பயன்பாட்டை கணக்கிட போதிய பணியாளர்கள் இல்லை என்று கூறி வந்தது. ப்ரீபெய்ட் மீட்டர் முறை கொண்டு வரப்பட்டால், மின்சாரப் பயன்பாட்டைக் கணக்கிட பணியாளர்கள் தேவையில்லை. அதனால் மாதந்தோறும் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு மட்டுமே கட்டணம் பிடித்தம் செய்யப்படும். அதனடிப்படையில் மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என்பதால் ஒவ்வொரு இணைப்புக்கும் ஆண்டுக்கு ரூ.6,000 வரை மிச்சமாகும்.

எனவே, ப்ரீபெய்ட் மீட்டர் முறையை தமிழக அரசு எதிர்ப்பது நியாயமல்ல. போஸ்ட் பெய்ட் மீட்டர் முறை, ப்ரீபெய்ட் மீட்டர் முறை ஆகிய இரு முறைகளையும் தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். மக்களுக்கு எது தேவையோ, அதை அவர்கள் தேர்வு செய்து கொள்ள அனுமதிக்க வேண்டும். ப்ரீபெய்ட் மீட்டரைப் பயன்படுத்தி, மாதந்திர மின்கணக்கீட்டையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சிகரெட், அயன்பாக்சால் சூடு வைத்தனர்: 16 வயது சிறுமியை கொடூரமாக சித்ரவதை செய்து கொன்ற கொடுமை

சென்னை, நவ.5

சென்னை அமைந்தகரை மேத்தா நகர் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் முகமது நவாஷ். இவர் சொந்தமாக பழைய கார்களை வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார்.

இவருக்கு திருமணமாகி மனைவி நிவேதிதா மற்றும் 6 வயது குழந்தை உள்ளனர்.

நவாஸ் வீட்டில் கடந்த ஓராண்டாக தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த 16 வயது சிறுமி தங்கி வீட்டு வேலை பார்த்து வந்து உள்ளார்.

தீபாவளி தினத்தன்று நவாஸ் வீட்டில் வேலை முடிந்து குளிக்கச் சென்ற சிறுமி நீண்ட நேரமாகியும் வெளியே வராததால் சந்தேகமடைந்த நவாஸ் மற்றும் அவரது மனைவி நிவேதிதா இருவரும் குளியல் அறையின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அப்போது சிறுமி மர்மமான முறையில் இறந்து கிடப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் பயத்தில் நவாஸ் வீட்டை பூட்டி விட்டு மனைவி குழந்தையுடன் உறவினர்கள் வீட்டிற்கு சென்றுள்ளார்.

பின்னர் நேற்று முன்தினம் மாலையில் முகமது நவாஸ் தனது வக்கீல் மூலமாக சிறுமி இறந்தது குறித்து அமைந்தகரை போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார்.

போலீசார் விரைந்து சென்று நவாஸ் மற்றும் அவரது மனைவி நிவேதிதா முன்னிலையில் பாத்ரூமில் இறந்து கிடந்த சிறுமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் போலீசார் நடத்திய விசாரணையில் கொடூரமாக அடித்து கொலை செய்யப்பட்டு இருக்கும் திடுக்கிடும் தகவல் தெரியவந்தது.

சிறுமியின் உடலில் சிகரெட்டால் சூடு வைத்து சித்ரவதை செய்த காயங்கள் காணப்பட்டன. அயன்பாக்ஸ் வைத்து சிறுமியின் உடலில் சூடு வைக்கப்பட்டு உள்ளது. கடந்த சில மாதங்களாகவே இது போன்று சிறுமியை சூடு வைத்து மிகவும் கொடூரமாக கொடுமைப்படுத்தி இருப்பதும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து போலீசார் தம்பதியான முகமது நவாஸ்நிவேதிதா ஆகிய இருவரையும் கைது செய்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சிறுமியை அவரது உறவினர்கள் சிலரும் வீட்டில் வேலை செய்த இன்னொரு வேலைக்கார பெண்ணும் சேர்ந்து கொடுமைப்படுத்தி இருப்பதும் தெரிய வந்தது.

இதைத்தொடர்ந்து அவர்கள் மீதும் கைது நடவடிக்கை பாய்ந்துள்ளது. இது தொடர்பாக லோகேஷ் அவரது மனைவி ஜெயசக்தி மற்றும் சீமா வேலைக்கார பெண் மகேஸ்வரி ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கொடூரமாக கொலை செய்யப்பட்ட சிறுமி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர் ஆவார்.

இதனால் அனைவர் மீதும் தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்புச் சட்டம், குழந்தை தொழிலாளர் தடுப்புச் சட்டம், கொலை, மற்றும் போக்சோ சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

தீபாவளி அன்று சிறுமி சரியாக வேலை செய்யவில்லை எனக்கூறி கடுமையாக வீட்டில் இருந்தவர்கள் தாக்கியுள்ளனர். அதே நேரத்தில் சிறுமி கடந்த சில மாதங்களாகவே தொடர்ச்சியாக கொடூரமாகசித்ரவதைக்கு உள்ளாகி இருப்பதும் போலீஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாகவும் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்கிடையே சிறுமியின் தாய் மகள் உயிரிழந்த தகவல் அறிந்து தஞ்சையில் இருந்து சென்னை வந்தார். கணவரை இழந்து வாழும் அவர் தனது சிறுவயதுமகனுடன்சென்னை வந்து மகளை இழந்து தவியாய் தவித்து வருகிறார்.

மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த அவரால் தனது மகளின் உடலை சொந்த ஊருக்கு கொண்டு சென்று அடக்கம் செய்ய இயலாத நிலை உள்ளது.

இது பற்றி அவர் போலீசாரிடம் தெரிவித்து தனது மகளை சென்னையில் அடக்கம் செய்து விடுங்கள்என்றுகூறியிருக்கிறார். இதனைக் கேட்டு போலீசாரும் கண்ணீர் வடித்துள்ளனர்.

இதையடுத்து சென்னையிலேயே சிறுமியின் உடலை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வீட்டில் வேலை செய்த 16 வயது சிறுமி கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# சென்னை விமான நிலையத்திற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்: விடிய, விடிய சோதனை




ஆலந்தூர், நவ.5

சென்னை விமான நிலைய இயக்குனர் அலுவலகத்தில் உள்ள இணையதளத்திற்கு நேற்று நள்ளிரவு இமெயிலில் தகவல் வந்தது. அதில் சென்னை விமான நிலையத்தில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளன. விமானநிலையத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இமெயில் மிரட்டலில் குறிப்பிட்ட விமானத்திற்கோ அல்லது விமான நிலையத்தில் குறிப்பிட்ட பகுதிக்கு என்றோ குறிப்பிடாமல் இருந்ததால்விமானநிலையம் மற்றும் விமான நிலைய வளாகப் பகுதிகள் அனைத்திலும் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்டனர்.

விமானங்களை நிறுத்தி வைக்கும் பகுதி, ஓடுபாதை, விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் இடம், பயணிகள் புறப்பாடு, சரக்கு பார்சல்களை விமானங்களில் ஏற்றும் பகுதி ஆகிய இடங்களில் இன்று காலை வரை விடிய,விடிய சோதனை நடைபெற்றது. ஆனால் வெடிகுண்டுகள் எதுவும் இல்லை. வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரிந்தது.

இதுகுறித்து, சென்னை விமான நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து வெடிகுண்டு மிரட்டல் வந்த இமெயில் முகவரியை வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

சென்னைவிமானநிலையத்தில் கடந்த 3 நாட்கள் வெடிகுண்டு புரளிகள் இல்லாத நிலையில் மீண்டும் மிரட்டல் வரத்தொடங்கி உள்ளது.

# சீமானுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தால் எங்கள் பயணத்தின் வேகம் தடைபடும் த.வெ.க. நிர்வாகி பரபரப்பு அறிக்கை

சென்னை, நவ.5

விஜய் பற்றி கடுமையான விமர்சனங்களை முன் வைத்த சீமானுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகி சம்பத்குமார் பரபரப்பான அறிக்கை ஒன்றை தனது வலைதள பக்கத்தில் வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:

சென்னையில் நடந்த தமிழ்நாடு நாள் பொதுக் கூட்டத்தில் சீமான் முன் வைத்த விமர்சனங்களால் தமிழக வெற்றிக் கழக தொண்டர்கள் அவரையும் இனி மற்ற அரசியல்வாதிகளில் ஒருவராகக் கருதி விலகிச் செல்வார்கள்.

தமிழக வெற்றிக் கழக மாநாடு நடப்பதற்கு முன்பு சீமான் பேசிய பேச்சுகளுக்கும், மாநாட்டின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு அவர் பேசிய பேச்சுகளுக்கும் இடையே பெரிய வேறுபாடு தெரிகிறது.

தமிழக வெற்றிக் கழக தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட உயர்நிலை நிர்வாகிகளுக்கு பல பணிகள் உள்ள நிலையில் சீமானைப் போன்று பேசுபவர்கள் ஒவ்வொருக்கும் பதில் சொல்லிக் கொண்டு இருந்தால் எங்கள் பயணத்தின் வேகம் தடைபடும்.

அரசியல் எதிரி யார் என்பதை முடிவு செய்துவிட்டு தமிழக வெற்றிக் கழகம் களமாடி வருகிறது. யாரை விமர்சனம் செய்ய வேண்டும், யாரைக்கடந்துபோக வேண்டும் என்பதை விஜய் எங்களுக்கு உணர்த்தி உள்ளார்.

சீமான் தனது கருத்தை தனது இதயத்தில் இருந்து பேசவில்லை என்பதால் அதை எங்களது மூளைக்குள் கொண்டு போக விரும்பவில்லை. அவரவர் கருத்து அவரவர் உரிமை என்றும், முடிவை தமிழக மக்கள் கரங்களில் கொடுத்து விட்டுப் பணியைக் கவனிப்பதே அனைவருக்கும் நல்லது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# இந்த மாதம் இறுதியில் தமிழக சட்டசபை கூடுகிறது



சென்னை, நவ.5

தமிழக சட்டசபை கூட்டம் இந்த மாதம் கடைசி வாரம் கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. தமிழக சட்டசபையில் கடந்த பிப்ரவரி மாதம் 19ந்தேதி பட்ஜெட் தாக்கல் செய்து முடித்ததும் அதன் மீதான விவாதம் 4 நாள் நடைபெற்றது.

இதன்பிறகு மானியக் கோரிக்கை மீதான விவாதம் உடனே நடைபெறாமல் பாராளுமன்ற தேர்தலுக்காக தள்ளி வைக்கப்பட்டது. தேர்தல் முடிந்ததும் 202425ம் ஆண்டிற்கான மானிய கோரிக்கை மீதான விவாதத்தை நடத்தும் வகையில் கடந்த ஜூன் 20ந்தேதி தமிழக சட்டசபை மீண்டும் கூடியது.

அப்போது துறை வாரியாக மானிய கோரிக்கை மீதான விவாதங்கள் அடங்கிய கூட்டம் ஜூலை 29ந்தேதி வரை நடந்தது. வழக்கமாக 6 மாதத்திற்கு ஒருமுறை தமிழக சட்டசபை கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

அந்த வகையில் டிசம்பர் மாதத்திற்குள் சட்டசபை கூட்டப்பட வேண்டும். சபாநாயகர் அப்பாவு இப்போது ஆஸ்திரேலியா நாட்டின் சிட்னி நகரில் நடைபெற இருக்கும் 67வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் பங்கேற்க சென்றுள்ளார். அவருடன் சட்டசபை செயலாளர் சீனிவாசன் உடன் சென்றுள்ளார். வருகிற 17ந்தேதி தான் சென்னை திரும்புகின்றனர்.

அதன் பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் கலந்து பேசி சட்டசபை கூடும் தேதியை சபாநாயகர் அறிவிப்பார். அநேகமாக இந்த மாதம் கடைசி வாரம் (நவம்பர்) சட்டசபை கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த கூட்டத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை, போதை பொருள் நடமாட்டம், மழைவெள்ளம் சேதம், கூட்டணி விசயங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து காரசார விவாதங்கள் நடைபெறும்.

2026 தேர்தலில் எநத கூட்டணி ஜெயிக்கும் என்ற வகையில் அமைச்சர்களின் பேச்சுக்கள் இருக்கும். ஆளும் கட்சிஎதிர்க்கட்சி இடையே அனல் பறக்கும் விவாதங்களுக்கு பஞ்சம் இருக்காது.

# காவிரி நீர்பிடிப்பு பகுதியில் கனமழை: ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



ஒகேனக்கல், நவ.5

தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லுக்கு கர்நாடகம், ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். அவர்கள் அருவியில் குளித்தும், பரிசலில் சென்றும் மகிழ்ந்து செல்வர்.

இதனிடையே தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக் கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசி மணல் உள்ளிட்ட இடங்களில் நேற்று இரவு கனமழை பெய்தது.

இதனால் 6,500 கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

விடுமுறை தினமான இன்று ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

முதலைப் பண்ணை, சிறுவர் பூங்கா உள்ளிட்ட பகுதிகளை சுற்றி பார்த்தனர். சுற்றுலா பயணிகள் குடும்பத்தினருடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

பின்னர் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்றவாறு காவிரி ஆற்றை கண்டு ரசித்தனர். இளைஞர்கள் எண்ணெய் மசாஜ் செய்து மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். குடும்பத்துடன் பூங்காவில் அமர்ந்து மீன் குழம்புடன்உணவு உண்டு மகிழ்ந்தனர். சாலையோரம் இருந்த கடைகளில் பொறித்து வைத்த மீன்களையும் ஆர்வமுடன் வாங்கி சாப்பிட்டனர்.

ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் நடைபாதை, பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் எங்கு பார்த்தாலும்மக்கள்கூட்டமாகவே காணப்பட்டது.

இதனால் மசாஜ் தொழிலாளர்கள், மீன் சமையலா'கள், பரிசல் ஓட்டிகள் உள்ளிட்ட தொழிலாளர்கள், வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். நீர்வரத்தை பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

# தொடர் மழையால் 63 அடியை நெருங்கும் வைகை அணை நீர்மட்டம்

கூடலூர், நவ.5

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்தது. இதனால் சாலையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

மேலும் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி நின்றதால் பொதுமக்கள் அவதியடைந்தனர்.

வைகை அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருவதால் கடந்த 2 நாட்களில் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது.

இன்று காலை நிலவரப்படி 62.30 அடியாக உள்ளது. நீர்வரத்து 2745 கன அடி நீர் வருகிற நிலையில் மதுரை மாநகர குடிநீருக்காக மட்டும் 69 கன அடி நீர் திறக்கப்படுகிறது. எனவே இன்று மாலைக்குள் 63 அடியை எட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது.

71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் மீண்டும் முழு கொள்ளளவை எட்டும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதனால் விவசாய பணிகளில் மும்முரமாக இறங்கியுள்ளனர்.

முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 124.30 அடியாக உள்ளது. அணைக்கு 3402 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து தமிழக பகுதிக்கு 1100 கன அடி நீர் திறக்கப்படுகிறது. 3479 மி. கன அடி நீர் இருப்பு உள்ளது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம்55அடியில்நீடித்து வருகிறது. இதனால் அணைக்கு வரும் 100 கன அடி நீர் அப்படியே திறக்கப்படுகிறது. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 126.28 அடியாக உள்ளது. அணைக்கு வரும் 534.70 கன அடி நீர் அப்படியே திறக்கப்படுகிறது.

ஆண்டிபட்டி 20, அரண்மனைப்புதூர் 0.4, பெரியகுளம் 52, மஞ்சளாறு 10, சோத்துப்பாறை 123.2, வைகை அணை 2.2, போடி 33.4, உத்தமபாளையம் 5.6, பெரியாறு அணை 72.8, தேக்கடி 60.4, சண்முகாநதி 10.6 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது.

# குமரி கிழக்கு மாவட்ட வர்த்தக காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு சான்றிதழ் விஜய் வசந்த் எம்.பி. வழங்கினார்

நாகர்கோவில், நவ.5

குமரி கிழக்கு மாவட்ட வர்த்தக காங்கிரஸ் மாவட்ட, வட்டார நிர்வாகிகள், மாவட்ட பொருளாளர், செயற்குழு உறுப்பினர் போன்ற பதவிகளுக்கு நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சான்றிதழ்களை பாராளுமன்ற காங்கிரஸ் பொருளாளரும், வர்த்தக காங்கிரஸ் மாநில தலைவருமான விஜய் வசந்த் எம்.பி. நாகர்கோவிலில் உள்ள எம்.பி. அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

நிகழ்ச்சியில் குமரி கிழக்கு மாவட்ட வர்த்தக காங்கிரஸ் தலைவர் டாக்டர் சிவகுமார், கிழக்கு மாவட்ட வர்த்தக காங்கிரஸ் செயல் தலைவர் ஆரோக்கிய ராஜன், பொதுச் செயலாளர் பால் டேனியல், செயலாளர் கிங்ஸ்லின், துணைத்தலைவர் ராம் மூர்த்தி, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள்ராமன் லட்சுமணன், வர்த்தக காங்கிரஸ் ஆலோசகர் முகமது சாகுல் அமீது மற்றும் பலர் உடன் இருந்தனர்.

# விஜய் பற்றி யாரும் விமர்சிக்கக்கூடாது அ.தி.மு.க.வினருக்கு எடப்பாடி பழனிசாமி உத்தரவு



சென்னை, நவ.5

தமிழ்நாட்டில் கடந்த 2021ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணி 159 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தனிப்பெரும்பான்மையுடன் தி.மு.க. ஆட்சி அமைத்தது. தி.மு.க. கூட்டணிக்கு 45.38 சதவீத வாக்குகள் கிடைத்தன.

அதே நேரம் ஆட்சியை இழந்த அ.தி.மு.க., கூட்டணியுடன் 75 இடங்களை பெற்றது. வாக்கு சதவீதமும் 39.72 சதவீதமாக குறைந்து போனது.

இதனால், வருகிற 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் வலுவான கூட்டணியுடன் களம் இறங்க அ.தி.மு.க. முடிவு செய்துள்ளது.

ஆனால், ஓரளவு வாக்கு வங்கியை வைத்திருக்கும் கட்சிகள் எல்லாம் தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ளன.

அ.தி.மு.க. எதிர்பார்க்கும் கூட்டணி அமையவேண்டுமெனில், தி.மு.க. கூட்டணியில் மாற்றம் ஏற்பட வேண்டும். அது சாத்தியமாகுமா? என்ற நிலை உள்ளது.

இந்த நிலையில், அரசியல் களத்துக்கு புதிதாய் வந்துள்ள நடிகர் விஜய், தமிழக வெற்றிக்கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ளார். 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலை நோக்கி காய்களை நடத்தி வரும் நடிகர் விஜய், சமீபத்தில் தனது கட்சியின் முதல் மாநாட்டை விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் வெற்றிகரமாக நடத்தினார். அந்த மாநாட்டில் திரண்ட தொண்டர்களின் கூட்டம் மற்ற கட்சிகளை சற்று ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது.

அதுவும் மாநாட்டில் பேசிய விஜய், ''2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெறுவது உறுதி. என்றாலும், கூட்டணிக்கு வரும் கட்சிகளுக்கு ஆட்சி, அதிகாரத்தில் பங்களிப்பு வழங்கப்படும்'' என்று வெளிப்படையாக அறிவித்தது, தி.மு.க. அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகளை திரும்பி பார்க்க வைத்துள்ளது.

அதே நேரத்தில், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வே விஜய் கட்சியுடன் கூட்டணி அமைத்தால் என்ன? என்று யோசித்து வருகிறது. வலுவான கூட்டணியுடன் களம் இறங்கும் தி.மு.க.வை வீழ்த்த இது போன்ற கட்சியுடன் கூட்டணி அமைப்பது அவசியம் என்று அ.தி.மு.க. கருதுகிறது.

இந்த நிலையில், வரும் 6ந்தேதி (புதன்கிழமை) சென்னையில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம், கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற இருக்கிறது. இந்தக் கூட்டத்தில், சட்டசபை தேர்தலை வலுவாக எதிர்கொள்ளும் வகையில் கூட்டணி அமைப்பது குறித்து விவாதிக்கப்பட இருக்கிறது. அதற்காக சில திட்டங்களை வியூகங்களாக வகுத்து வருகிறது.

இதற்கு மத்தியில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, கட்சியின் மாநில நிர்வாகிகளுக்கும், செய்தி தொடர்பாளர்களுக்கும் வாய்மொழி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளதாக கூறப்படுகிறது. அதாவது, பா.ஜ.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி ஆகிய 4 கட்சிகளை விமர்சித்து கருத்து தெரிவிக்க கூடாது என்று கூறியுள்ளார்.

'அரசியலில் யாரும் நிரந்தர நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை' என்ற வகையில், தேர்தல் நேரத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதால், முன்கூட்டியே அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு எடப்பாடி பழனிசாமி வாய்ப்பூட்டு போட்டுள்ளார்.

எடப்பாடி பழனிசாமியின் இந்த உத்தரவு அ.தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைக்கும் எண்ணத்தில் எடப்பாடி பழனிசாமி இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் பரபரப்பாக கூறப்படுகிறது.

# விஜய் வசந்த் முன்னிலையில் காங்கிரசில் இணைந்த SDPI நிர்வாகிகள்



கன்னியாகுமரி, நவ.5

விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட களியக்காவிளை பகுதியை சேர்ந்த எஸ்.டி.பி.ஐ. நிர்வாகிகள் மற்றும் தொகுதிக்கு உட்பட்ட ஏராளமான இளைஞர்கள் குமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் முன்னிலையில் காங்கிரஸ் பேரியக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

மேற்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் திபாகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

குமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த தினவிழா நேற்று முன்தினம் குமரி மாவட்டத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்த தினத்தையொட்டி குமரி தந்தை மார்ஷல் நேசமணி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தது.

குமரி தினத்தை முன்னிட்டு குமரி தந்தை மார்ஷல் நேசமணி சிலைக்கு குமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# முதுநிலை பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை திட்டமிட்டே தாமதப்படுத்துவதா? ராமதாஸ் கண்டனம்

சென்னை, நவ.5

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தனது எக்ஸ் வலைதளத்தில்கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்காக நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கான பாடத்திட்டம் மாற்றியமைக்க ப்பட இருப்பதாகவும் புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலேயே போட்டித்தேர்வுகள் நடத்தப்படும் என்றும் பள்ளிக்கல்வித்துறை அறிவித்திருக்கிறது. முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தை திட்டமிட்டே தாமதப்படுத்தும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவு கண்டிக்கத்தக்கது. தமிழ்நாட்டில் கடைசியாக கடந்த 2021ம் ஆண்டு தான் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டு சுமார் 2 ஆயிரம் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டனர். கடந்த 3 ஆண்டுகளாக ஆள் தேர்வு அறிவிக்கைகள் வெளியிடப்படாத நிலையில் 2024ம் ஆண்டு மே மாதத்தில் ஆள் தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டு ஆகஸ்ட் மாதத்தில் போட்டித்தேர்வுகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மே மாதம் முடிவடைந்து ஆறு மாதங்களாகியும் ஆள் தேர்வு அறிவிக்கை வெளியிடப்படவில்லை.

முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வுகளுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ள நிலையில் வரைவுப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்படுவதற்கு குறைந்தது ஓராண்டு ஆகும். அதன் பின்னர் போட்டித்தேர்வு அறிவிக்கப்பட்டு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மேலும் ஒன்றரை ஆண்டுகள் ஆகும். அதன்படி பார்த்தால் 2021 முதல் 2026 வரை காலியான இடங்களுக்கு புதிய முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள். இது உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் கல்வியை கடுமையாக பாதிக்கும். முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வுகளின் பாடத்திட்டத்தை மாற்றியமைப்பதை பாட்டாளி மக்கள் கட்சி குறைகூறவில்லை. மாறாக பாடத்திட்டத்தில் திருத்தம் செய்யப்படும் காலத்தைத்தான் விமர்சிக்கிறது. கடைசியாக 2021ம் ஆண்டு முதுநிலை பட்டதாரி ஆசிரியருக்கான போட்டித்தேர்வு அறிவிக்கப்பட்டு இன்று வரை மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இந்த மூன்று ஆண்டுகளில் பாடத்திட்டத்தை மாற்றியிருக்கலாம். அதை விடுத்து அடுத்த போட்டித்தேர்வு அறிவிக்கப்படவிருக்கும் வேளையில் பாடத்திட்டத்தை மாற்ற இருப்பதாக கூறுவதை ஆசிரியர்கள் நியமனத்தை தாமதிக்கும் முயற்சியாகவே பார்க்க வேண்டி உள்ளது.

ஏற்கனவே இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான உதவி பேராசிரியர் பணிக்கான போட்டித் தேர்வுகள் அறிவிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முடங்கி கிடக்கின்றன. இப்போது பாடத்திட்ட மாற்றத்தை காரணம் காட்டி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் நியமனத்தையும் தாமதப்படுத்துவதை ஏற்க முடியாது. எனவே முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான ஆள் தேர்வு அறிவிக்கையை உடனடியாக வெளியிட்டு அனைத்து காலியிடங்களையும் நிரப்ப ஆசிரியர் தேர்வு வாரியமும் தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ள்து.

# விஜய்யின் வருகை சீமானுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது: கார்த்தி சிதம்பரம்

காரைக்குடி:நவ.5

விஜய், தமிழக அரசியல் களத்திற்குள் நுழைந்துள்ளார். அவர்கட்சியான தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் அரசியல் மாநாடு கடந்த மாதம் 27ந்தேதி விக்கிரவாண்டியில் நடந்தது. இந்த மாநாட்டில் தமிழகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் விஜய்யின் பரபரப்பான பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இந்நிலையில் சிவகங்கை தொகுதி எம்பி கார்த்தி சிதம்பரம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"விஜய் தனது கொள்கையை தெளிவாக, வெளிப்படையாக சொல்ல வேண்டும். மேலும் அவரது மாநாட்டில் உத்வேகம் இருந்தது. அது அமைப்பாக மாறி, தேர்தலை சந்திக்கும் அளவுக்கு செல்லுமா? என்பதை காலம் தான் சொல்லும். சாதுரியமாக அல்லது பிம்பத்தின் அடிப்படையில் முடிவு



எடுப்பார்களா என்பதை பார்க்க வேண்டும்.

அரசியல் கட்சியின் செயல்பாடு, நடத்தை, கொள்கை போக, போக தான் தெரியும். சீமான் கட்சிக்கு நிரந்தர வாக்குகள் கிடையாது. இதனால் அவருக்கு யதார்த்தமான அச்சம் வந்துள்ளது" என்று தெரிவித்தார்.

# அஜித்தைப் போல் வசீகரமான நபரை இதுவரை கண்டதில்லை நடிகை ரெஜினா



தமிழ் சினிமாவின் முன்னணி கதாநாயகிகளில் ஒருவர் ரெஜினா கசாண்ட்ரா. இவர் 'கண்ட நாள் முதல்', 'அழகிய அசுரா', 'கேடி பில்லா கில்லாடி ரங்கா', 'மாநகரம்', 'சிலுக்குவார்பட்டி சிங்கம்', 'நெஞ்சம் மறப்பதில்லை' போன்ற படங்களில் நடித்துள்ளார். தெலுங்கு, இந்தி படங்களிலும் நடித்துள்ளார்.

நடிகர் அஜித் குமார் இயக்குநர் மகிழ் திருமேனி கூட்டணியில் உருவாகி இருக்கும் படம் விடாமுயற்சி. துணிவு படத்தைத் தொடர்ந்து அஜித் நடித்து வரும் இந்த படத்திற்கான அப்டேட்கள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. சில மாதங்களுக்கு படத்தின் போஸ்டர்களும் மற்றும் படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை வெளியிட்டனர். விடாமுயற்சி படத்தின் டப்பிங் பணிகள் பூஜையுடன் தொடங்கியதாக படக்குழு சில நாட்களுக்கு முன் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

சமீபத்தில் நடந்த ஒரு நேர்காணலில் ரெஜினா கசான்ட்ரா விடாமுயற்சி படத்தின் சில அப்டேட்களை கூறினார் அதில் 'திரைப்படம் மிகவும் அழகாகவும் பிரம்மாண்டமாக உருவாகியுள்ளது. இப்படத்திற்கு முன் நான் அஜித் சாரை சந்தித்ததில்லை. எல்லோரும் அவரை பார்க்க வேண்டும். அவரைப் போல் வசீகரமான நபரை என் வாழ்வில் பார்த்ததில்லை. திரைப்படம் மிகச்சரியான நேரத்தில் வெளிவரும். இயக்குனர் மகிழ்திருமேனி சிறப்பாக இயக்கியுள்ளார். 90 சதவீத திரைப்படம் அஜர்பைஜானில் படமாக்கப்பட்டுள்ளது. என்னுடைய கதாப்பாத்திரத்தை திரைப்படத்தில் ஆர்வமாக உள்ளேன்' என கூறியுள்ளார்.

விடாமுயற்சி படத்தில் அஜித் குமாருடன், ஆரவ், அர்ஜுன், திரிஷா, ரெஜினா கசான்ட்ரா, நிகில் நாயர் மற்றும் பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். ஒளிப்பதிவு பணிகளை ஓம் பிரகாஷ் மேற்கொள்ள, படத்தொகுப்பு பணிகளை என்.பி. ஸ்ரீகாந்த் மேற்கொள்கிறார்.

விடாமுயற்சி படத்தின் டீசர் வருகிற நவம்பர் 10 ம் தேதி வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது. தற்போது, நடிகர் அஜித்குமார் குட் பேட் அக்லி திரைப்படத்தில் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது

# பேபி ஜான் படத்தின் டீசர் ரிலீஸ் அப்டேட்




ஷங்கரின் உதவி இயக்குநராக அறிமுகமாகி, இன்று பல ஹிட் படங்களை இயக்கி வருபவர் பிரபல இயக்குனர் அட்லி. இவர் 'ஜவான்' படம் மூலம் பாலிவுட்டில் இயக்குனராக அறிமுகமானார். இப்படம் ரூ.1,000 கோடிக்கும் அதிகமான வசூலை குவித்தது. தற்போது பாலிவுட்டில் அட்லி மற்றும் அவரது மனைவி பிரியாவின் ஏ பார் ஆப்பிள் ஸ்டுடியோஸ், ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் முராத் கெதானியின் சினி1 ஸ்டுடியோஸ் ஆகியவை இணைந்து "பேபி ஜான்" என்ற படத்தை தயாரித்துள்ளன.

கடந்த 2016ம் ஆண்டு விஜய் நடிப்பில் அட்லி இயக்கத்தில் உருவான திரைப்படம் 'தெறி'. இந்த படம் மிகப்பெரிய வெற்றி பெற்ற நிலையில் இந்த படம் ஹிந்தியில் தற்போது உருவாகி வருகிறது.

அட்லியின் உதவி இயக்குனர்களில் ஒருவரான காலிஸ் என்பவர் இயக்கி வரும் இந்த படத்தில் விஜய் நடித்த வேடத்தில் பிரபல பாலிவுட் நடிகர் வருண் தவான் நடிக்கிறார். இந்த படத்தின் நாயகிகளாக கீர்த்தி சுரேஷ் மற்றும் வாமிகா கபி ஆகியோர்நடித்துவருகின்றனர்.மைக்கேல்படத்தின்ஒளிப்பதிவாளர்கிரண்கௌஷிக்ஒளிப்பதிவாளராகபணியாற்றுகிறார்.

"பேபி ஜான்" என தலைப்பிடப்பட்ட இந்த படம் மே 31ம் தேதி ரிலீஸ் ஆகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சில பணிகள் முடியாத காரணத்தால் இந்த படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிவைக்கப்பட்டது. இதையடுத்து படம் கிறிஸ்துமஸ் விடுமுறையை முன்னிட்டு டிசம்பர் 25 ம் தேதி ரிலீஸ் ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், படத்தின் தயாரிப்பு நிறுவனம் வீடியோ ஒன்றை வெளியிட்டு டீசர் குறித்த அப்டேட் கொடுத்துள்ளது. அதன்படி, நாளை காலை 11 மணிக்கு இப்படத்தின் டீசர் வெளியாகும் என்று அறிவித்துள்ளது.

# தலை தீபாவளி கொண்டாடிய வரலட்சுமி சரத்குமார்



நடிகர் சரத்குமாரின் மகளும், நடிகையுமான வரலட்சுமி சரத்குமார், கடந்த 2012ம் ஆண்டு வெளியான 'போடா போடி' திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானார். தொடர்ந்து தாரை தப்பட்டை, சண்டக்கோழி2, சர்க்கார் உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ள வரலட்சுமி சரத்குமார், தமிழ், தெலுங்கு உள்பட பல்வேறு மொழிகளில் நடித்துள்ளார். இவர் கதாபாத்திரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களை தேர்ந்தெ டுத்து நடித்து வருகிறார். இதனால் இவருக்கென்று தனி ரசிகர்கள் பட்டாளம் உள்ளது. வரலட்சுமி சரத்குமார் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நிக்கோலாய் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்த நிலையில் தற்போது வரலட்சுமி அவருடைய கணவரோடு தலை தீபாவளி கொண்டாடி உள்ளார். வரலட்சுமியின் தீபாவளி கொண்டாட்டத்தில் சரத்குமாரின் குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொண்டிருக்கின்றனர். சரத்குமாரும் ராதிகாவும் தீபாவளி பரிசுகளைவரலட்சுமிக்கும்அவரதுகணவருக்கும்வழங்கினர்.அப்போதுஎடுத்தபுகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வரலட்சுமி தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கங்களில் பகிர்ந்து இருக்கிறார். இந்தபுகைப்படங்கள்மற்றும்வீடியோக்கள்இணையத்தில்வைரலாகிவருகின்றன.

# பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ்: ஸ்வெரேவ் சாம்பியன் பட்டம் வென்றார்



பாரீஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி பிரான்ஸ் நாட்டில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் உலக தரவரிசையில் 3வது இடத்தில் இருக்கும் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், தரவரிசையில் 18வது இடத்தில் இருக்கும் பிரான்ஸ் வீரர் ஹம்பெர்ட் உடன் மோதினார். இந்த ஆட்டத்தில் ஸ்வெரேவ் 6-2, 6-2 என்ற செட் கணக்கில் ஹம்பெர்ட்டை எளிதில் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

# பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்: முதல் ஆட்டத்தில் இகா ஸ்வியாடெக் வெற்றி



உலகின் டாப்8 முன்னணி வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் டபிள்யூ.டி.ஏ.இறுதி சுற்று எனப்படும் பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் நடந்து வருகிறது.

இதில் 2வது நாளான ஒற்றையர் 'ஆரஞ்சு' பிரிவில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியனும், தரவரிசையில் 2வது இடத்தில் இருப்பவருமான இகா ஸ்வியாடெக் (போலந்து), 13ம்நிலை வீராங்கனையான பார்பரா கிரெஜ்சிகோவாவுடன் (செக்குடியரசு) மோதினார். இந்த ஆட்டத்தில் இகா ஸ்வியாடெக் சரிவில் இருந்து மீண்டு வந்து 4-6, 7-5, 6-2 என்ற செட் கணக்கில் கிரெஜ்சிகோவாவை வீழ்த்தி போட்டியை வெற்றியுடன் தொடங்கினார்.

# எல்லா அணிக்கும் ஒரே மாதிரியான விதியை கடைபிடிக்க வேண்டும் பண்ட் அவுட் குறித்து ரோகித்



நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதல் 2 போட்டிகளிலேயே நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரை கைப்பற்றி விட்டது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் கடந்த 1ம் தேதி தொடங்கியது.

3வது நாளுக்குள்ளேயே முடிவடைந்த இந்த போட்டியில் நியூசிலாந்து 25 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் இந்தியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட தொடரை நியூசிலாந்து 30 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி அசத்தியுள்ளது.

முன்னதாக இந்த கடைசி போட்டியில் நியூசிலாந்து நிர்ணயித்த 147 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணிக்கு ரிஷப் பண்ட் தனி ஆளாக வெற்றிக்கு போராடினார். அவர் 57 பந்துகளில் 64 ரன்கள் அடித்திருந்தபோது அஜாஸ் படேல் பந்துவீச்சில் எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். முதலில் நடுவர் அவுட் வழங்கவில்லை. பின்னர் நியூசிலாந்து ரிவ்யூ அப்பீல் செய்தது.

ரீப்ளேவில் ரிஷப் பண்ட் பேட்டில் பந்து பட்டதற்கான துல்லியமான அறிகுறி ஏதுமில்லை. பந்து பேட்டை நெருங்கும்போது அல்ட்ரா எட்ஜில் சிறிய அதிர்வு காணப்பட்டதை வைத்து அவுட் என கொடுக்கப்பட்டது. அந்த நேரத்தில் பந்து பேட்டில் பட்டதா இல்லையா என்பதை கண்டறிய ஹாட் ஸ்பாட் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவில்லை. இதனால் பண்ட் அதிருப்தியுடன் வெளியேறினார். ஒருவேளை பண்டுக்கு அவுட் கொடுக்கப்படாவிட்டால் இந்திய அணி வெற்றி பெற அதிகம் வாய்ப்பு இருந்தது.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்துள்ள இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா கூறுகையில், "ரிஷப் பண்டுக்கு 3வது நடுவர் அவுட் வழங்கியது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் ஏதாவது சொன்னால் அது ஏற்றுகொள்ளப்படாது. ஆனால் உறுதியான ஆதாரம் இல்லை என்றால் கள நடுவர் அளித்த தீர்ப்பைதான் அமல்படுத்த வேண்டும். அதுதான் எனக்கு சொல்லப்பட்டது. கள நடுவர் அவுட் இல்லை என்று அளித்த முடிவு எப்படி மாற்றப்பட்டது என்பது எனக்கு புரியவில்லை.

நடுவர்கள் எல்லா அணிக்கும் ஒரே மாதிரியான விதியை கடைபிடிக்க வேண்டும். உங்கள் மனதை மாற்றிக்கொண்டே இருக்காதீர்கள். அந்த முடிவு எங்கள் பார்வையில் மிகவும் முக்கியமானது. ரிஷப் மிக சிறப்பாக பேட்டிங் செய்தார். அவர் எங்களை வெற்றிக்கு அழைத்துச் செல்வார் என்று உணர்ந்தேன். ஆனால் இது ஒரு துரதிர்ஷ்டவசமான வெளியேற்றம்" என்று கூறினார்

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.